# இளவேனில்



**கேசி தமிழ் மன்றம்**

இதழ் 14 ~ ஆடி 2018
Ilavenil - Casey Tamil Manram Inc
ISSN 2200-789X

*பார்வைக்கு...*


சஞ்சிகை : இளவேனில்~14
வெளியீடு : 29 ஜூலை 2018
வெளியிடுவோர் : கேசி தமிழ் மன்றம்
ஆசிரியர் குழு : க.மணிவண்ணனன், சத்தியா
வடிவமைப்பு : க.பார்த்தீபன்
அட்டைப்படம் : ராஜி பத்மசிறி
தொடர்புகட்கு : கேசி தமிழ் மன்றம்
PO Box 2516,
Fountain Gate, VIC 3805
Australia


## பொருளடக்கம்


- ஆசிரியரின் உள்ளத்திலிருந்து *2*
- தலைவர் உள்ளத்திலிருந்து *3*
- நம் அவுஸ்திரேலிய திருநாடு *4*
- பனைமரம் *5*
- உரு மாறு கரு எது *7*
- திருவள்ளுவர் - சித்திரம் *8*
- சித்திரம் *9*
- பாரதியார் *10*
- முக்கனி *11*
- தமிழின் மகிமை *13*
- பிள்ளையார் கோயில் - சித்திரம் *14*
- நாய் சித்திரம் *15*
- தமிழ் பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் *16*
- ஓட்டம் *17*
- ஏகாகிரதா *18*
- புலம்பெயர் நாடுகளில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் *20*
- யார் உயிர் நண்பர்கள் *21*
- சித்திரம் *22*
- ஆஸ்திரேலியா காப்போம் *23*
- நான் *24*
- மீன் *24*
- விபரீதம் *25*
- தமிழ் சித்திரம் *27*
- வண்ணத்துப்பூச்சி *28*
- நீ வாழ் தமிழனாக *29*
- இணையதளத்தின் நன்மைகளும் தீமைகளும் *30*
- தமிழ் சித்திரம் *31*
- கதி *32*
- பதினெட்டு வயதினிலே *33*
- உயிரோடு கலந்த உறவுகள் *35*
- சத்தத்தின் உணர்ச்சி *38*

# இளவேனில்

## ஆசிரியரின் உள்ளத்திலிருந்து

இன்று எட்டாவது ஆண்டில் நடை போடுகின்ற இளவேனில் குழந்தையாகத் தளிர்நடை பயின்றபோது இளவேனிலில் எழுதிய சிறுவர் சிறுமிகள் இன்று பன்னிரெண்டாமாண்டுத் தேர்வை எதிர்நோக்கு பவர்களாகவோ அல்லது பல்கலைக்கழகத்தில் பயில்பவர்களாகவோ வளர்ந்து விட்டார்கள். அவர்களின் முதிர்ச்சி பெற்ற ஆக்கங்கள் இளவேனிலை அலங்கரிக்கும் அதேவேளையில் இன்று குழந்தைகளாகவும், சிறுவர்களாகவும் இருக்கின்ற எம் சநததியினரின் மழலை எழுத்துக்களும் ஓவியங்களும் இளவேனிலுக்கு மெருகூட்டிக் கொண்டிருக்கின்றன.

ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதிய காலம் மாறி, காகிதத்தில் எழுதுகோல் கொண்டு எழுதியதும், புத்தகவாசனையை முகர்ந்து கரங்களில் நூல்களைத் தாங்கிப்பிடித்து வாசித்த காலங்களும் கடந்து, இணையத்தளப் பதிவுகளும் வாசிப்பும் வளர்ந்த மற்றும் வளர்ந்து வருகின்ற நாடுகளை ஆட்சி செய்கின்ற காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இத்தகைய சூழ்நிலையில் ஒரு இதழை அச்சுப்பிரதியாக வெளிக்கொண்டு வருவது அத்துணை எளிதானதல்ல.

இத்தகு சூழ்நிலையில் இளவேனிலின் எதிர்கால இருப்புக்கு உங்கள் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வேண்டி நிற்கிறோம். மழலைகளின் வண்ணங்களும் வளர்ந்தவர்களின் எண்ணங்களும் ஒன்றாகக் கலந்து இளவேனிலில் சங்கமமாகட்டும்.

தமிழ் பேசும் நாளெல்லாம் பிறந்தநாளே - அன்னைத்

தமிழ் மறந்த நாளெல்லாம் பிறவா நாளே

**நன்றி !**

**இளவேனில் ஆசிரியர் குழு.**

# தலைவரின் உள்ளத்திலிருந்து ......

உலகில் இன்றும் பயன்பாட்டில் உள்ள பழைய மொழிகளில் மூத்த மொழியான தமிழ் மொழியையும் ,தமிழர் தம் உயரிய அடையாளமான கலை கலாச்சார இலக்கியங்களையும் எம் இளம் தலைமுறைக்கும் சந்ததிக்கும் ஊட்டும் நோக்கில் இற்றைக்கு 8 வருடங்களுக்கு முன் 2010ம் ஆண்டில் விக்டோரியா மாநிலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கேசி தமிழ் மன்றம் இன்று ஒரு பெரும் விருட்சமாக பரந்து தமிழ் நிழல் பரப்பி தன்னாலான தமிழ்ச் சேவைகளை பெரு முனைப்புடன் முன்னெடுத்து செல்கிறது.

கேசி தமிழ் மன்றமானது சமுதாய மாற்றத்திற்கேற்ப தனது செயற்பாடுகளை மக்களின் ஆலோசனைகள் மற்றும் பங்களிப்புடன் மாற்றியமைத்து முன்னெடுத்து செல்லும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் மாதாந்தம் மூத்த குடிமக்களுக்கான ஒன்றுகூடல், சிறுவர்களுக்கான இசை, நாடகப் பட்டறை, தமிழர் இசைக் கருவியான பறை இசைப் பட்டறை என்பவற்றையும் ஒழுங்கு செய்து ஊக்குவிக்கின்றது. அத்துடன் கேசி தமிழ் மன்றத்தின் அடையாள நிகழ்வாக தைப்பொங்கலையும், குளிர்கால நிகழ்வாக ஆடிப்பிறப்பினையும் நடாத்திவருகின்றது. அதுமட்டுமல்லாது பல தமிழ் அமைப்புக்களுடன் சேர்ந்து பொதுவான நோக்கத்திற்கு பல செயற்திட்ட்ங்களில் ஈடுபடுகின்றது, குறிப்பாக ஹார்வார்டு தமிழ் இருக்க்கை நிதி திடட்டலிலும் தன்னை ஈடுபடுத்தியிருந்தது.

கேசி தமிழ் மன்றத்தின் ஒரு அங்கமாக வருடம் இருமுறை வெளியிடப்படும் இளவேனில் சஞ்சிகையின் 14ஆவது இதழ், இம்முறை ஆடிப்பிறப்பு கொண்டாட்டத்தில் வெளிவருவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

இவ்விதழானது சிறுவர் முதல் பெரியயோர் வரை எம்மிடையே மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதற்கான ஒரு ஊடகமாக திகழ்கின்றது. இளவேனில் தொடர்ந்தும் வெளிவர உங்களது ஆதரவை வேண்டுகின்றோம்.

எதிர்வரும் காலங்களில் புதிய வழிமுறைகளில் புதுப் பொலிவுடன் திகழ வேண்டும் என்று வாழ்த்துவதோடு , தொடர்ந்தும் இளவேனில் மலர்ந்து இளம் எழுத்தாளர்களுக்கு இதமான இடம் வழங்க வேண்டும் என்று வாழ்த்தி அமைகிறேன்.

சச்சிதானந்தம் சத்தியன்
தலைவர்
கேசி தமிழ் மன்றம்

# நம் அவுஸ்திரேலிய திருநாடு

-சரண்யா பிரணவதர்ச்சர்மா-

நம் நாடு ...
நாம் வளரும் நாடு ...
நம்மை வளர்க்கும் நாடு ...
ஆம்! இது அவுஸ்திரேலிய திருநாடு!

அனுதினமும் அலைந்து தெருவில்
மண் புழுதி பூசித்திருந்து
கால் கடுக்க வெப்பம் தாங்கி
கருகி வாடிய நாடல்ல இது!

பனியும் குளிரும் அள்ளித்தெளிக்கும்
வெப்பக்காற்றும் வீசித்தெறிக்கும்
நான்நேரமும் வானிலை மாறும்
வாசனை மிகுந்த புது நாடு!

உள்ளங்கை அமுதை தட்டிப்பறித்ததுண்டு
திருட்டு மாங்காயுடன் புளியம்பழம் சுவைத்து
எச்சில் பண்டமும் அமுதென்று சேர்ந்து
வாழ்ந்த கூடல் நாடல்ல இது!

அவரவர் அவர் பாங்கிலே
தனிச்சுதந்திரம் போற்றப்படும்
தூய்மையும் அமைதியும் காக்கப்படும்
நவநாகரிக நாடு இது!

கோவில் மணி கேட்டெழுந்து
வயல் வெளி கிணற்றில் நீரிறைத்து
நீராட்டி சீராட்டும் அன்னையினை
பின் தொடரும் சிறுவர் இங்கில்லை!

கணணியும் கைபேசியுமாய்
நாளொரு புத்தாக்கத்துடன்
தொழிநுட்ப தாகம் கொண்ட
முற்போக்கு சிறார்கள் அதிகம் உண்டு!

அங்கே, அத்தை மாமா பக்கத்து வீடு
சித்தி சித்தப்பா பின் வீடு
தாத்தா பாட்டி அண்டை வீடு
உறவுகள் வருகைக்கே நம் வீடு!

இங்கே, சுற்றி வர சொந்தமிருந்தும்
கண்டுகொள்ள நேரமில்லை!
வேலை நேரம் மிச்சம் போக
அரட்டையடிக்க யாருமில்லை!
அவரவர் அவரவர் பாடு
யாருக்குமில்லை எவராலும் கேடு!

பீட்சா உண்டாலும் பாட்சா போல வாழலாம்
கைபேசி வழி காட்டி கைலாயம் வரை
போகலாம்!
சொகுசு பங்களாவும் புதுசு காரும்
கை கசக்க டாலரும் பார்த்து ரசிக்க மாதரும்
காட்டி வாழ்வை வாழச்செய்த சிறப்பு நாடு இது!

விட்டு வந்த இன்பங்களையும் மறக்கடித்தது
மனங்கவரும் வாழ்வு தரும் போதை நாடு இது !
வாழ வழி சமைத்து இனிய வாழ்வமைத்து
அதிகபட்ச மனித உரிமையை வாரி வழங்கும்
அவுஸ்திரேலிய திருநாடு இது !!

# பனைமரம்

-மங்களன்-

தாய்லாந்தின் புதிய விமான நிலையமான சுவர்ணபூமி விமான நிலையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு சில நாட்களே ஆகியிருந்தது. அப்போதெல்லாம் அவன் தாய்லாந்தின் பாங்கொக் விமான நிலையம் ஊடாகவே தான் அனேகமாக பயணிப்பான். அன்றய இரவு புதிய விமான நிலையமான சுவர்ணபூமிக்கு வந்தபோது மிகவும் களைப்படைந்திருந்ததால் அந்த புதியதும் பிரமாண்டமானதுமான விமான நிலையத்தின் ஆள் அரவமில்லாத ஒரு தூரமான மூலைக்குச்சென்று உறங்கியே விட்டான்.

காலையில் துப்புரவு பணியாளர்களின் சத்தத்தில் நித்திரை குழம்பியவனுக்கு கண்ணுக்கு தெரிந்ததோ ஒரு வடலிப்பனைமரம். இதென்ன தான் பனங்காணிக்குள்ளா படுத்திருக்கிறேன் அல்லது யாரோ தன்னை நித்திரையில் தூக்கிக்கொண்டே பனங்காணி ஒன்றுக்குள் போட்டு விட்டார்களோ என்று குழம்பியே விட்டான். உடனடியாக எழுந்திருந்தவன் கண்களை கசக்கி விட்டு அந்த பனை மரத்தை உற்றுப் பார்த்தான். அவன் உடனே யோசித்தது என்ன பனைமரத்தை முறித்து கொண்டுவந்து இங்கு நட்டுள்ளார்களா என்றுதான். ஏனென்றால், அது அவன் படுத்திருந்த சீமெந்து தளத்திலிருந்து மேலே இருந்த கண்ணாடி கூரைவரைக்கும் உயரமான, அண்ணளவாக ஒரு நான்கு மீட்டர் உயரமானதாகவே அவனுக்குப்பட்டது. சிறிது நேரத்தில், அது ஒரு பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட ஓர் செயற்கைப் பனைமரமே என்றும் அது ஒரு முறியாத பனைதான் என்றும் அவனுக்கு விளங்கிவிட்டது. தாய்லாந்து அரசாங்கம் தமது ஒரு இயற்கை செல்வமான பனையை எங்கு எப்படியெல்லாம் காண்பிக்கிறார்கள் மற்றும் காட்சிப்படுத்துகிறார்கள் என்று அவன் ஆச்சரியப்பட்டதுடன் தனக்கும் இந்தப்பனைக்கும் ஊரில் இருந்தபோது இருந்து தொடரும் ஒரு தொடுசலை மீட்கத்தொடங்கினான்.

அவன் பிறந்து வளர்ந்த ஊரில் பனைகள் இல்லாத காணிகளே இல்லை என்று சொல்லலாம். அவனது அப்பப்பாவிற்கு வானுயர்ந்து வளர்ந்த பனைகள் உள்ள காணிகள் சிலது சொந்தமாக இருந்தன. அந்த பனை ஓலைகளை பாவித்து கொட்டில் கூரைகளும் வீட்டு வேலிகளும் வேயப்படும் போது அவனும் சேர்ந்து சிறிய உதவிகள் செய்து இருக்கிறான். பச்சை பனை ஓலைகளை தாங்கள் வளர்த்த மாடுகளிற்கு கிழித்துபோட்டிருக்கிறான். பனைகளில் இருந்து விழும் நொங்குகளை வெட்டி குடித்து சுவைத்திருக்கிறான். பனம்பழங்களை சேகரித்து பனம் பினாட்டு செய்து விற்ற அவனது அம்மம்மாவிற்கு உதவியிருக்கிறான். அதிகாலை வேளைகளில் பனம் பழம் பொறுக்கச்சென்று கட்டாக்காலி நாய்களிடம் பலமுறை கடி வாங்கிய அம்மம்மாவிடம் உதவி செய்ததற்கு உபகாரமாக சிறிது பணமும் வாங்கி இருக்கிறான். மாமாமாருடன் சேர்ந்து பனம்பாத்தி போட்டு கிழங்கு பிடுங்கியிருக்கிறான். பிடுங்கிய கிழங்குகளை ஓடியலுக்காகவும் அவித்து புழுக்கொடியல் போடவும் என்று

தரம்பிரித்திருக்கிறான். பனங்கிழங்கு துவையல் செய்து சகோதரங்களுடனும் மச்சான் மாருடனும் உண்டு களித்திருக்கிறான்.

தாயும் சிறிய தாயும் சேர்ந்து செய்த பனங்காய் பணியாரம் ஆசை தீர உண்டு களித்திருக்கிறான். அம்மம்மா செய்த பாணிப்பினாட்டும் தேனீரும் குடித்து குதூகலித்திருக்கிறான். தானே புழுக்கொடியலை இடித்து மாவாக்கி, தேங்காய் துருவலும் பனங்கட்டியும் சேர்த்து வயிறு நிறைய சகோதரர்களுடன் சாப்பிட்டிருக்கிறான். பனங்கட்டி சேர்த்து செய்த கொழுக்கட்டை மற்றும் பிட்டு எத்தனை நாள் சாப்பிட்டிருப்பான். கருப்பனீர் குடித்து தாகம் தீர்த்திருப்பான். கருப்பனீரை காய்ச்சி பாணியாக்கி பனங்கட்டியாக்க தனது தாய்க்கும் அம்மம்மாவிற்கும் எத்தனை நாள் உதவியிருப்பான்.

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே என்று பாடசாலையில் பாடிவிட்டு வீட்டுக்கு வந்து தாயார் செய்து வைத்த பயறு மற்றும் தேங்காய் சொட்டுப்போட்ட ஆடிக்கூழை ஆசை தீர குடித்திருப்பான். கூழ் காணாது என்று தாயோடு சண்டை கூட பிடித்திருக்கிறான். கடந்த சில வருடங்களாக அவுஸ்திரேலியாவில் உள்ள விக்டோரியாவில் கேசி தமிழ் மன்றம் நடாத்தி வரும் ஆடிப்பிறப்பு விழாவில் தான் இப்போது ஆடிக்கூழ் குடிக்ககிடைப்பதையும் அவன் மனம் ஒரு கணம் நினைத்துக்கொண்டது. பானையில் நிரப்பி ஒரு வருடத்துக்கு மேலாக தொங்கவிடப்பட்ட பாணியிலிருந்து எடுத்த கல்லக்காரத்துடன் [பனம்கற்கண்டு] உழுத்தம்மாவும் பொரியரிசி மாவும் சாப்பிட்டு தேனீர் குடித்திருக்கிறான்.

அவனது மாமா கொழும்பிலிருந்து விடுமுறையில் ஊருக்குவரும்போது, இறால், பிலாக்கொட்டை, நண்டு, பயிற்றங்காய், விளைமீன் போட்டு செய்த ஒடியல் கூழ் குடித்து ஒரு கொண்டாட்டமே மாமாவுடன் நடாத்தியிருப்பான். இப்போதெல்லாம், அவனது நண்பன் ராஜனும் ராஜனின் மனைவி கீதாவும் ஒடியல் கூழ்செய்து அவனது குடும்பத்தையும் சில குடும்ப நண்பர்களையும் அழைத்து ஊர் ஞாபகங்களை மீட்டி கூழ் குடித்துக்கொள்வார்கள்.

அப்போது நேரத்தை பார்த்தவன் தனது அடுத்த விமானப்பயணத்துக்கு இன்னும் சில மணிகள் இருப்பதையும், விடிந்து காலைப்பயணம் மேற்கொள்ள பிரயாணிகள் வருவதற்கிடையில் காலைக்கடன்களை முடிக்க எழுந்து அந்த பிளாஸ்டிக் பனையை கடந்து நடந்தான். காலைக்கடன்களை முடித்தவன் ஏதாவது சாப்பிடுவம் என்று ஒரு கடைக்குள் போனவனை ஒரு அழகிய தாய்லாந்துக்காரி சுவாதிக்கா [வணக்கம் – பெண் பேசும் போது] என்று வரவேற்று நல்ல வண்ணமயமான உணவுகளின் படங்கள் உள்ள கையேடு ஒன்றை கொடுத்தாள். அவனும் சுவாதிக்காப் [வணக்கம் – ஆண் பேசும் போது] என்று சமாளித்து, ஒரு தாய்னூடில் சூப்பிற்கு சொல்லிவிட்டு என்ன சூடாககுடிக்க வேண்டும் என்று கேட்டவளிடம் ஒரு தேனீர் வேண்டுமென்றான். அவள் கேட்டாள் உனக்கு வைட் சுகர் வேண்டுமோ அல்லது பிரௌன் சுகர் வேண்டுமோ அல்லது பாம் சுகர் வேண்டுமோ என்று. ஒரு கணம் கூட தாமதியாமல் பாம் சுகர் வேண்டுமென்றவனை ஒருமாதிரியாக பார்த்தவள், இது பாம் [பனை] மரத்திலிருந்து உற்பத்தி செய்வது அதன் சுவையை நீ சுவைத்திருக்கிறாயா என்று கேட்டாள். ஓம் என்று சிரித்தவனை ஆச்சரியமாக பார்த்தவள் கொஞ்சம் பொறு

சமையல் காரனிடம் உனது தெரிவை சொல்லிவிட்டு வருகிறேன் என்றவள் சில நொடிகளில் வந்து அவனது மேசையிலேயே அவனுக்கு எதிராக இருந்தாள். அவனைக் கேட்டாள் உனக்கு எப்படி பாம் சுகர் தெரியும் என்று. அவன் சற்று நேரத்துக்கு முன்னர் யோசித்ததெல்லாவற்றையும் அவளுக்கு சொன்னான்.

தாய்லாந்தின் தலை நகரமான பாங்கொக்கை தவிர வேறு எங்குமே போகாத, தாய்லாந்தின் ஒரு பிரதேசமான உடான் தானீ என்ற இடத்தை சேர்ந்த அவள் தான் பனை தங்கள் நாட்டில் மட்டுமே நிறைந்து இருப்பதாகவும், தாய்லாந்தை சுற்றி உள்ள நாடுகளான லாவோச், கம்போடியா, மியன்மார் மற்றும் வியட்னாம் போன்ற நாடுகளில் சிறிய அளவில் இருப்பதாகவும் நினைக்கிறேன் என்று அவனுக்கு சொன்னாள். அவன் பனை இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலும் ஏன் பிலிப்பின்சில் கூட இருப்பதாகவும் சொன்னான்.

*தாய்லாந்துக்காரியுடன் பனையை பற்றிய சம்பாசனை தொடரும்...*

## *உரு மாறு கரு எது ?*
## *கண்டுபிடி கலையுமுன்னே*

*நாயிருக்கும் நரியிருக்கும்*
*பேயிருக்கும் பிசாசிருக்கும்*
*பார்க்கப் பார்க்க பலவிருக்கும்*
*பார்த்து மறுமுறை பார்க்கையில்*
*மாறி மற்றொரு உருவிருக்கும்*
*ஒன்றுக்குள் மற்றொன்று*
*மாற்றுருவில் மறைந்திருக்கும்*


*கூடிக்குடும்பமாய் பார்க்கையிலே*
*கூடிச்செல்லும் ஒவ்வொன்றாய்*
*இறுதியில் காற்றடிக்கும்*
*இடம்மாறி அவைசெல்லும்*
*இன்று தரா நேற்றுகளாய்*
*இவையனைத்தும் கடந்துபோம்*
*இறுதியில் இரவு சொல்லும்*
*இறுதி அஞ்சலி இவைக்கெல்லாம்*

*-நிலவு வந்து உயிர்கொடுக்கும்-*

**-தே-பகீரதன் .**



திருவள்ளுவர்
ஆக்கம் - ஆகாஷ்
சுரேஷ்

மரம்




பம்பரம்

தம்பி





கரம்



ஆக்கம்:-

சுபகா.சுதர்சன்

[Prep - Bharathy - Berwick]

# பாரதியார்

அபிதாரணி - சந்திரன்

***"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதானது எங்கும் காணோம்"*** இது பாரதியார் கவிதை

பாரதியார் 1882 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11 ஆம் திகதி தமிழ் நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டையபுரத்தில் பிறந்தார். இவரின் இயற்பெயர் ''சுப்பிரமணியன்'' என்றாலும் ''சுப்பையா'' என்றே அழைக்கப்பட்டார். இவரது பெற்ரோர் சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மாள் ஆவர்.

இவர் தனது 11 வது வயதில் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே கவி புனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார். இவருடைய கவிப்புலமையைப் பார்த்து வியந்த எட்டையபுர சமஸ்தானப் புலவர்கள் அவருக்கு அன்போடு வழ்ங்கிய பட்டம் **''பாரதியார்.''** அன்றிலிருந்து தான் சுப்பிரமணி , சுப்பிரமணிய பாரதியார் என எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.

பாரதியார் ஒரு கவிஞர், எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், விடுதலைவீரர் மற்றும் சமூக சீர் திருத்தவாதி ஆவர்.. பாரதியார் தமிழ்க் கவிதையிலும் உரைநடையிலும் சிறப்பான புலமை கொண்டு நவீன கவிதைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார்.

பாரதியார் தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், வங்காளமொழி, ஆகியவற்றில் புலமை பெற்றவர். பிற மொழி இலக்கியங்களை மொழி பெயர்க்கவும் செய்தார்.

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதானது எங்கும் காணோம்"*

என்று தமிழின் பெருமையை உலகுக்கு உரக்கச் சொன்னவர்.. தமிழ் மொழியின் தனித்துவத்தை சுவைபட மட்டுமல்லாமல் சுவாரஸ்யத்துடனும் விளக்கியவர் பாரதியார்.

பெண் அடிமைத்தனங்களும், சாதிய குரூரங்களும் தலைதூக்கியாடிக்கொண்டிருந்த கால கட்டத்தில் வாழ்ந்தவர் பாரதியார். தான் வாழ்ந்த சமுதாயத்தின் தீண்டாமைக்கு எதிராக விமர்சித்தார். சமுதாயம் வகுத்த பொய்யான விழுமியங்களையும் மூடப் பழக்கவழக்கங்களையும் வேரறுக்க ஆசைப்பட்டு தான் அணிந்திருந்த பூநூலை அறுத்தெறிந்தார், சாதிகள் இல்லையடி பாப்பா என்று குழந்தைகளுக்கு தனது கவிதைகளின் வாயிலாகக் கற்பித்தார். பெண் அடிமைத் தனத்தை பெயர்த்தெறியப் போராடினார்.

*"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்*

*அறிவில் ஓங்கி இவ்வையம் தளைக்குமாம்"*

என்று பெண்களுக்கு புத்துயிர் கொடுத்து புதுமைப் பெண் படைத்தார்.

பாரதியார் காலத்தால் அழியாத காவியங்களான கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம்,தேசிய கீதங்கள், விடுதலைப்பாடல்கள் போன்றவற்றைப் படைத்தார். பகவத் கீதையை தமிழில் மொழி பெயர்த்தார். சுதந்திரப் போராட்டங்களைத் தூண்டிவிடுகின்ற கட்டுரைகளைப் பத்திரிகைகளுக்கு எழுதினார். உலகெங்கும் அவருக்கு ஆதரவு பெருகியது.

மூத்த பிரஜைகளின் நலன் பேணுமுகமாக, கேசி தமிழ் மன்றத்தினால் நடாத்தப் படுகின்ற மூத்த பிரஜைகள் ஒன்றுகூடல், ஒவ்வொரு மாதத்தின் கடைசி சனிக்கிழமை முற்பகல் 10:00 தொடக்கம் மதியம் 2:00 மணிவரை, 112 High Street, Berwick, VIC 3806 எனும் முகவரியில் அமைந்துள்ள "Berwick Senior Citizens Hall" இல் நடைபெறுகின்றது. மேலதிக விபரங்கள் கேசி தமிழ் மன்ற இணையத்தளத்தில் www.caseytamilmanram.org.au பார்வையிடலாம்.

## முக்கனி

-கிரிசிகன் சீவராஜா-

“வேகமாக ஓடி வா கமலா!” என்று தன்னுடைய சகோதரிக்கு சொல்லிக்கொண்டு அமலா அந்த வண்ணாத்திப்பூச்சியை துரத்திக்கொண்டு ஓடினாள். நீண்டதூரம், கமலாவும் அமலாவும் வண்ணாத்திப்பூச்சியை பின்தொடர்ந்து துரத்தும்போது, திடீரென ஒரு குழியில் இருவரும் விழுந்து உருண்டு புரண்டு சறுக்கிக்கொண்டு போய் மயக்கம் அடைந்தார்கள்.

சிறிது நேரத்திற்கு பின், "அம்மா... அம்மா... அப்பா... அப்பா...." என்று அமலா நினைவுக்கு வந்த போது அனுங்கினாள். மெல்ல எழும்பிக்கொண்டு அமலா சுற்றும் முற்றும் பார்த்தாள்.
"என்ன இது? நான் எங்கே இருக்கிறேன்?" என்று தனக்குள்ளே கேட்டாள். அவளுடைய சகோதரி காணாமல் இருப்பதை உணர்ந்துபார்க்கும்போது அமலாவுக்கு உடனே பயம் வந்தது.
"கமலா....! எங்கே இருக்கிறா...ய்!" என்று பயந்து கத்தினாள். உடனே மரத்தின் அருகில் ஒரு சத்தம் கேட்டது. அமலா மெதுவாக போய் என்ன சத்தம் என்று பார்த்தாள்.
"அம்மா!" என்று அமலா பயத்துடன் கத்தியபோது அவளுடைய சகோதரி கமலா பாய்ந்து வந்தாள்.
"அமலா! நாங்கள் எங்கே இருகிறோம்?" என்று பயத்துடன் கமலா கேட்டாள்.
அதற்கு அமலா, "எனக்கு தெரியவில்லை, ஆனால், இந்த இடம் சுற்றி பார்க்கும்போது நிறைய எலும்புகள்இருக்கின்றன. அப்படியென்றால், நாங்கள் ஒரு சிங்கத்தின் குகையிலோ அல்லது ஒரு பாதாள உலகத்திலோ இருப்பதைப்போல தெரிகிறது.” என்று அவள் சொன்னாள்.

அமலாவிற்கும் கமலாவிற்கும் மிகப் பயமாக இருந்தது. இனிமேல் அவர்களின் பெற்றோர்கள் மற்றும் நண்பர்களை வாழ்க்கையில் காணமாட்டோம் என்ற எண்ணம் மனதில் தோன்றியது. "எப்படியாவது நாம் எமது வீட்டிற்கு செல்லவேண்டும்"என்று கமலா திட்டமிட்டாள். "ஆனால் நாங்கள் எப்படி வீட்டிற்கு செல்வது?" என்று இருவரும் சொல்லிக்கொண்டு யோசித்து கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் அமலாவும் கமலாவும் இருந்த இடத்தில் 'சல சல'என்ற ஒரு சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. திடீரென்று ஒரு குரங்கு, அவர்கள் முன்னே பாய்ந்து வந்தது. "யார் நீங்கள்?" என்று அந்த குரங்கு கேட்டது. "ந.. ந.. ந.. நான் அமலா, இது என்னுடைய அக்கா, கமலா." என்று பயத்துடன் அமலா கூறினாள். "அமலா! கமலா! உங்களைப் பார்க்க அறிமுகமில்லாதவர்களாக இருக்கின்றீர்கள்.” என்று அந்த குரங்கு சொல்லியது.

"நாங்கள் எங்கேயிருக்கிறோம்? நாம் மறுபடியும் வீட்டிற்கு செல்லவேண்டும், அதற்காக நீங்கள் எங்களுக்கு உதவிசெய்கிறீர்களா?" என்று இருசகோதரிகளும் கெஞ்சி கேட்டார்கள்.
"ம்ம்......நீங்கள் பாதாள உலகத்தில் இருக்கிறீர்கள்.” என்று சொல்லிவிட்டு, சிறிது நேரம் யோசித்த பின், “சரி நான் உதவி செய்கிறேன் ஆனால், நீங்கள் உங்கள் இடத்திற்கு திரும்ப செல்ல வேண்டுமென்றால், இருவரும் மூன்று இடங்களும் சென்று’ மூன்று பணிகள் செய்து, மூன்று கனிகள் பெற்று, பழரசம் செய்து குடித்தால் உங்கள் இடத்திற்கு செல்லலாம்” என்றது. “மூன்று பணிகளா? அவை என்ன?”என்று இருவரும் கேட்டார்கள்.

“அந்த மூன்று பணிகள் இவை தான்.

முதலாவது– நீங்கள் இந்த பாதாள உலகின் அரசனைப் பார்த்து, அவரை மகிழ்விக்க வேண்டும். இதை சரியாக செய்தால், அவர் உங்களுக்கு ஒரு கனியைக் கொடுப்பார்.
இரண்டாவது– வடக்கில் இருக்கிற மந்திரவாதியை பார்த்து அவர் சொல்லுகிற புதிருக்கு சரியான பதில் கூறவேண்டும். அதற்கு சரியாக பதிலளித்தால், உங்கள் இருவருக்கும் இன்னொரு கனி கிடைக்கும்.
மூன்றாவது பணி– கிழக்கு பகுதியில் இருக்கிற

கோட்டையிற்குச் சென்று, அதில் தங்கும் அசுரனை தோல்வி அடையச் செய்யவேண்டும், இதைச் சரியாக முடித்தால், கோட்டையில் இருக்கிற பத்தாவது அறையில்,மூன்றாவது கனி கிடைக்கும்.'' என்று அந்த குரங்கு தனது புதிய நண்பர்களுக்கு விளங்கப்படுத்தியது.

இதைக் கேட்ட அமலாவும் கமலாவும் சோர்வடைந்துப் போனார்கள். "அமலா, நாங்கள் இதை முழு முயற்சியுடன் செய்யவேண்டும். ஏனென்றால் வீட்டிற்குச் செல்ல இதுதான் ஒரே வழி." என்று கமலா ஊக்கத்துடன் அமலாவிடம் சொன்னாள். "எதற்காக தாமதிக்கிறீர்கள்? நாங்கள் புறப்படுவோம்!" என்று குரங்கு கூறியது. இதற்கு பிறகு அமலாவும்,கமலாவும் மற்றும் அந்த குரங்கும் அரசனின் இராச்சியத்திற்கு போக விரைவாக நடந்தார்கள்.

மூன்று மணி நேரம் ஆகி, அவர்கள் அரசனின் இராச்சியத்திற்கு வந்து சேர்ந்தார்கள். உள்ளே போகும்போது, குரங்கு அரசனைபார்த்து மரியாதை செலுத்தியது. "வணக்கம் அரசரே, இன்றைக்கு இருவர் உங்களை மகிழ்விக்க வந்துள்ளார்கள்." என்று அந்தகுரங்கு சொல்லியது."ஹா ஹா ஹா! அற்புதம் அற்புதம்! சரி, உங்கள் கலகலப்பை பார்க்கலாம். ஆரம்பியுங்கள்!" என்றுஅரசன், அமலாவிடமும் கமலாவிடமும் கூறினார்.

அமலாவும் கமலாவும் ஒரு சிறிய நகைச்சுவை நாடகம் ஒன்றை ஆரம்பித்தார்கள். அமலா கேள்வி கேட்க அதற்கு கமலாஒரு நகைச்சுவையான பதில் சொல்லுவாள், அவர்களின் நகைச்சுவையை கேட்டு அரசன் சிரித்துகொண்டிருந்தார். "நிறுத்துங்கள்! போதும்! இதற்குமேல் நீங்கள் இருவரும் நகைச்சுவை சொன்னால், எனக்கு சிரித்துகொண்டே மூச்சு போகப்போகிறது. நான் முப்பது வருடத்தில் இப்படி ஒரு நகைச்சுவையைக் காணவில்லை. நீங்கள் நன்றாக செய்தீர்கள். அதற்குநான் உங்களுக்கு ஒரு பரிசைத் தருகிறேன். இந்த பரிசு ஒரு சக்தி வாய்ந்த கனி. இதை உண்டு இழந்த சக்தியைப்பெற்றுக் கொள்ளுங்கள்." என்று அரசன் அமலாவையும் கமலாவையும் புகழ்ந்து ஒரு கனி கொடுத்தார். "நன்றி அரசரே." என்றுகமலா சொல்லி அடுத்த பணி செய்வதற்காக புறப்பட்டார்கள்.

அடுத்த நாளில் அவர்கள் மந்திரவாதியின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். கதவைத் தட்டும்போது மந்திரவாதி அவர்களை பார்த்து, "நீங்கள் எதற்கு வந்தீர்க்ள் என்று தெரியும். உள்ளே வாருங்கள்" என்று சொல்லி வீட்டிற்கு அழைத்தார். அமலாவும்,கமலாவும் மற்றும் அந்த குரங்கும் ஒருவர்க்கொருவர் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். "ஹ்ம்ம்...நான் ஒருகேள்வி கேட்கிறேன். நீங்கள் சரியாக பதில் கூறவேண்டும்.''என்று சொல்லிவிட்டு ''ஆ! இதுதான் கேள்வி. ஒரு பிள்ளையும் அப்பாவும் கடற்கரைக்கு சென்றார்கள். செல்லும் போது அவர்கள் ஒரு விபத்தில் சிக்கிக்கொண்டார்கள். அந்த விபத்தில் அந்தபிள்ளைக்கு அடிபட்டிருந்தது, ஆனால், அந்த பிள்ளையின் அப்பா இறந்துபோய்விட்டார். அதனால் பிள்ளையை மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். சென்றபிறகு அந்த பிள்ளைக்கு அறுவை சிகிச்சை செய்கின்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த மருத்துவமனையில் இருக்கிற ஒரு மருத்துவர் சொன்னார் 'நான் அறுவைச் சிகிச்சை செய்யமாட்டேன் ஏனென்றல் அந்த பிள்ளை என்னுடைய மகன்.' என்று மறுத்தார். இது எப்படி?" என்று அந்த மந்திரவாதி கேட்டார். இருவரும் யோசித்துக்கொண்டிருந்தார்கள். யோசிக்கும்போது, உடனே கமலா சந்தோசத்துடன் துள்ளிக்கொண்டு"மந்திரவாதி அவர்களே இதற்கு பதிலென்றால், அந்த மருத்துவர் பிள்ளையின் அம்மா." என்று பதில் கூறினாள்.
"பிரமாதம். நீங்கள் சரியாக பதில் சொன்னீர்கள். அதனால்உங்களுக்காக ஒரு சக்தி வாய்ந்த கனியைத் தருகிறேன்." என்று மந்திரவாதி சொல்லி இரண்டாவது கனியை கொடுத்தார். இதற்கு பிறகு, அந்த குரங்கும், கமலாவும், அமலாவும் அவர்களின் கடைசி பணிக்காக கிழக்கே இருந்த கோட்டைக்குச் செல்லமறுபடியும் தொடங்கினார்கள்.

கமலாவும் அமலாவும் மற்றும் குரங்கும் அசுரனின் கோட்டைக்கு வந்து சேர்ந்தார்கள். இருவரும் பயத்துடன் கோட்டைக்குள்ளே

சென்றார்கள். கோட்டையில் ஒரு சத்தமும் கேட்கவில்லை. அதை தெரிந்த இரு சகோதரிகள் ஓடிப்போய் பத்தாவது அறைக்கு செல்லப் போனார்கள். திடிரென்று, இருவருக்கும் முன்னே அந்த அசுரன் தோன்றினான்.

அசுரன் பறந்துகொண்டு கமலாவை தனது வாளால் வெட்டமுயற்சிசெய்யும்போது, அமலா பின்பக்கமாக ஒரு கல்லைஎறிந்து, அசுரனின் கவனத்தை திருப்பினாள். உடனே அசுரன் தன் வாயால் நெருப்பைக் கக்கினான். நெருப்பை கக்க, இருசகோதரிகளும் நீரால் அந்த நெருப்பை அணைத்தார்கள். இதனால், அதிகமாக புகை வெளிவந்து, அசுரனின் கண்ணை மறைத்தது. இந்த சந்தர்ப்பத்தில், கமலாவும் அமலாவும், மூன்றாவது கனியை எடுத்து கோட்டையின் வாசலை பூட்டிவிட்டு தப்பினார்கள். வெளியே இருந்த குரங்கு இருவரையும் கோட்டை வாசலுக்கு வெளியே வருவதைக்கண்டு, ஆச்சரியப்பட்டது. "சரி நாங்கள் இப்போது என்ன செய்யவேண்டும்?" என்று கமலா கேட்டாள்.
"ஆகா! வாழைப்பழம், தோடம்பழம், மாம்பழம்!" என்று குரங்கு ஆச்சரியப்பட்டு அதை பழரசமாக ஆக்கியது "இந்த அபூர்வசக்தி வாய்ந்த மூன்று பழங்களின் ரசத்தைக் குடித்தால் நீங்கள் உங்களின் வீட்டிற்கு செல்லலாம்." என்று அந்த குரங்கு கூறியது.

## தமிழின் மகிமை

*தமிழுக்கு எத்தனை மகிமையடா*
*அதைப் பாட்டினில் சொல்வது*
*என் உரிமையடா*
*பாரதி சொன்னது அதிகமடா*
*அதைப் படிக்காமல்*
*போனவன் குருடனடா*
*தமிழ் மண்ணும்*
*பெண்ணும் உயர்ந்ததடா*
*அதை தாழ்வாய் நினைப்பவன்*
*சிறியோனடா*
*திருக்குறள் எங்களின்*
*வேதமடா அதை ஓத*
*மறந்தவன் போகனடா*
*தாய்க்குப் பின் தான் தெய்வமடா*
*இதை தலையாய் சுமப்பவன்*
*தமிழன்டா...*

**-ஆவூரான்-**

# பிள்ளையார் கோயில்.




எங்கள் பிள்ளையார் மிகவும் நல்லவர். எங்களை காப்பாற்று-வார். தினமும் அவரை வணங்குவோம்.

நன்றி

வர்ஷ்ணா ஜனந்தன்


ஜனனி - மு
ஆண்டு - 6


தமிழ்
பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

- இளனி • இளநீர்
- இங்கனம் • இங்ஙனம்
- எண்ணை • எண்ணெய்
- காச்சல • காய்ச்சல்
- சத்திரிக்கோல் • கத்தரிக்கோல்
- கோடாலி • கோடரி
- தீவாளி • தீபாவளி
- தேத்தண்ணி • தேநீர்
- பாவக்காய் • பாகற்காய்
- வெக்கம் • வெட்கம்

ஆக்கம்- ஆகாஷ் சுரேஷ்

## ஓட்டம்

-ஆரணன் மதியழகன்-

*வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கின்றது.*
*அனைத்தும் வேகமாக கடந்து போகிறது.*
*சுற்றி என்ன நடக்கறது*
*உனக்கே தெரியவில்லை.*
*எங்கும் உன் பெயர் எதிரொலிக்கிறது.*
*அவர்கள் வருகிறார்கள் தெரியும்*
*ஆனால்*
*அவர்களை எதிர்கொள்ளமுடியாது.*
*நீ வீட்டிலிருந்து*
*தொலைதூரத்தில் இருக்கலாம்.*
*உன் பெயர் உன்னை தொடர்கிறது.*
*உலகம் முழுவதும் உன் பெயர் தெரியும்.*
*இப்போ நீ பதில் சொல்லவேண்டும்.*
*ஆனால், ஆழ் மனதில்*
*ஒரு எதிர்மறை உணர்ச்சி.*
*வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கின்றது.*
*உன்னை பற்றிய செய்தி.*
*நீ திரும்ப வேண்டும்.*
*உன் பெற்றோர்களுக்கு நீ தேவை.*
*உன் சகோதரங்களுக்கு நீ தேவை.*
*உன் குடும்பத்திற்கு நீ தேவை.*
*ஆனால், அந்த உணர்ச்சி.*
*ஓடவேண்டும் என்ற உணர்ச்சி - உன்னை*
*திரும்ப விடாமல் தடுக்கிறது.*
*குடும்பத்தினர் கடமையை முடித்தனர்.*
*இது உன் முறை.*
*தப்பிச் செல்லும் முறை.*
*தப்பிக்க என்று ஒரு மன உறுதி.*
*உனது அம்மாவின் கோபத்திலிருந்து*
*உன் அப்பாவிடமிலிருந்து.*
*உன் சகோதரங்களிடமிருந்து*
*தப்பிச் செல்லும் மன உறுதி.*
*ஆற்றல் மிக்க உந்துதலுக்கு உன்*
*மன உறுதி தூபமிட்டது.*
*வீட்டிலிருந்தும், குடும்பத்திலிருந்தும்.*
*வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கின்றது.*

***இளவேனில் சஞ்சிகைக்கான ஆக்கங்களை***
***அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :***
Casey Tamil Manram
PO Box 2516,
Fountain Gate,
Vic 3805
**மின்னஞ்சல்:** editor@caseytamilmanram.org.au

# ஏகாகிரதா

## மனம், சரீரம், சுவாசம் மற்றும் ஆத்மா

***உடல் நலமும் யோகாவும்***

உலக சுகாதார நிறுவனம் நல்ல உடல் நலத்தை பின்வருமாறு வரையறுத்துள்ளது. ''நல்ல உடல்நலம் என்பது நோயற்ற அல்லது உடல் ஊனங்கள் இல்லாத வாழ்க்கை மட்டுமல்ல, அது ஒரு முழுமையான உடல், மன மற்றும் சமூக நலமுள்ள வாழ்க்கையாகும்''. யோகா எல்லோருக்கும் அத்தகைய வாழ்க்கையை பெற வழி வகுக்கும்.

யோகா என்ற சொல் "யுஜ்" என்ற சமஸ்கிருத வார்த்தையிலிருந்து உருவானது. அந்த வார்த்தை உடல், மனம் மற்றும் சுவாசத்தை ஒரு முனைப்படுத்துவது என்ற பொருளைக் கொண்டது.

எப்பொழுது மேற் சொன்ன மூன்று அம்சங்களும் ஆத்மாவுடன் முழுதலாக இணையுமோ அப்பொழுது ஒரு மனிதன் நோயற்ற வலிமையான உடலை அடைகிறான். இது மட்டுமல்லாமல் யோகா ஒரு மனிதனை அவனுடைய ஆத்மாவை முழுமையாக அறிந்துகொள்ள வழி காட்டுகிறது. இதன் மூலம் அந்த ஆத்மா மறுபிறப்பு இல்லாத நிலையை அடைகிறது.

***யோகாவின் எட்டு அங்கங்கள்***

1. **யமா** – நெறிமுறை
2. **நியமா** – நேர்மை
3. **அசனா** – அங்கங்களை வைக்கும் முறை
4. **பிராணாயாமா** – முழுமையான சுவாசிக்கும் முறை
5. **பிரத்யானா** – புலன்களை அடக்கும் முறை
6. **தாரனா** – மன ஒருமைப்பாடு
7. **தியானா** – தியான நெறி
8. **சமாதி** – முழுமை அடைதல்

***யோகாவின் கூறுகள்***

1. **ஆகாரம்** – நாம் உண்ணும் உணவு
2. **விகார** – நாம் நடந்துகொள்ளும் விதம்
3. **விசாரந்தம்** – நமது சிந்தனை
4. **நித்ரா** – நாம் உறக்கம் செய்யும் முறை

இந்த நான்கு கூறுகளும் ஒரு மனிதனிடம் முழுமையாக இருந்தால் அவன் வாழ்க்கை முறையாக அமையும்.

***நெறி முறையும் நேர்மையும்***

யோகா நம் எல்லோரையும் நேர்மையாக நெறிமுறையுடனும் வாழ வேண்டும் என்று சொல்கிறது. நெறி முறை என்றால் வன்முறையின்மை, உண்மை, திருடாமை, பேராசைப்படாமை, ஆவலை அடக்குதல் இவை யாவும் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளாகும். நேர்மையின் அங்கங்கள் சுத்தம், அடக்கம், சுய ஆய்வு, ஒழுக்கம் மற்றும் சரணடைவு ஆகும்.

மேற் கூறிய ஒழுங்கு முறைகளை கடைப்பிடித்தால் எல்லோரும் மன சாந்தியும் அதன் மூலம் நல்ல மன நலமும் அடையலாம். மன நலம் பெறுதல் நல்ல உடல் நலம் அடைவதற்கு முதல் படியாகும்.

***ஆசனங்கள் மூலம் உடல் நலம்***

முறையாகச் செய்யும் ஆசனங்கள் மூலம் நோய் நொடியில்லாத வாழ்க்கையைப் பெறலாம். முதன்மை, மத்திய மற்றும் இரண்டாம் நிலை என்று மூன்று விதமான அவய நலங்களையும் பெறலாம்.

★ஆசனங்கள் மூலம் தசைகள் வலிமை பெறுவது முதன்மை அனுகூலம்.

★சுரப்பிகளும் மற்ற உடல் உறுப்புகளும் உறுதி பெறுவது இரண்டாம் அனுகூலம்.

★நல்ல முழுமையான வலுவான நரம்பு மண்டலத்தை அடைவது மத்திய அனுகூலம்.

ஆசனங்களைச் செய்யும்போது அமைதியாக முறைப்படி சிரமமில்லாத, நிலையாகச் செய்தால் அனுகூலங்களை அதிகம் பெறலாம்.

***சுவாசம் மூலம் உயிர் வலிமை அடைதல்***

மிக நல்ல சிறந்த முறையில் யோகா செய்வதின் மூலம் மட்டுமே நாம் நமது தசைகளை வலுப்படுத்தி பின்பு சுவாசத்தை மேம்படுத்தி மனதை வலுப்படுத்த முடியும். உயிர் வலிமையை சுவாசிப்பதன் மூலம் ஆற்றலடைய முடியும்.உயிர் வலிமை (Pirana shakti) நமது சுவாசத்தை எடுத்துச் செல்லும் நாடிகள் மூலம் பரவுகிறது. நமது உடம்பில் 72000 நாடிகள் உள்ளன. அவைகளில் முக்கியமானவை மூன்று.இதா, பிங்களா மற்றும் அசுமனா நாடி.

இதா நாடியை சந்திர நாடி என்றும் சொல்வார்கள். நம் உடலின் இடது புறமாக குளிர்ச்சியைத் தரும் நாடி.

பிங்களா – சூரிய நாடி. நமது வலது புறமாக செல்லும் நாடி. அது நமக்கு உஷ்ணத்தை கொடுக்கும் நாடி.

அசுமன நாடி நமது முதுகு எலும்பின் கீழ் அமையும் நாடி. சுவாசத்தை அடக்கி நாம் அசுமன நாடியின் மூலம் உடலின் பல்வேறு நாடிகளில் சுவாசத்தைப் பிரவேசிக்க செய்கிறோம்.

***உடம்பில் உள்ள ஏழு சக்கரங்கள்***

கீழிட்ட ஏழு சக்கரங்களை நல்ல முறையில் பேணி கண்காணித்தால் நமக்கு எல்லாவித நன்மைகள் உண்டாகும்.

1. மூலாதார சக்ரா.................................................Mooladara
2. சுவாதிஸ்தான சக்ரா..........................................Suvadisthana
3. மனிப்புர சக்ரா ...................................................Mannipura
4. அணாஹத்த சக்ரா...............................................Anahata
5. விசுத்தி சக்ரா .....................................................Vishuddhi
6. ஆஜ்ன சக்ரா .......................................................Ajna
7. சஹஸ்நார் சக்ரா..................................................Sahasnar

***ஓம்கார் மந்திரம்***

தியானம் செய்யும் போது தீட்டா அலைகளை மூளையில் அதிகப்படுத்தி மனதை சாந்தம் அடையச் செய்கிறது. மேலும் ஆழ் மனதை அமைதிப்படுத்துகிறது. அதனால் நாம் நமது உணர்வுகளை கட்டுப்படுத்த முடியும். எண்டார்பின், என்கேபலில், சொடோனினி போன்ற மூளை அமிலங்களை அதிகம் சுரக்கச் செய்கிறது. இவைகளுக்கு மேலாக, நமது மனது அமைதியாக இருந்தால் உடலும் அமைதியாக இருக்கும்.

***யோகா செய்வதற்கு முன்பு அனுசரிக்க வேண்டிய அத்யாவசிய விதிமுறைகள்.***

# உணவு கழித்த பின், மூன்று மணி நேரம் கழிந்த பின்பு யோகா செய்யவேண்டும்.

# உடைகள் நமக்கு யோகா செய்ய தடையில்லாமல் அணிய வேண்டும்.

# இரண்டு ஆசனங்களுக்கு இடையில் சற்று இடைவேளை இருக்கவேண்டும்.

# அவரவர் தகுதிக்கு ஏற்ப ஆசனங்களை செய்ய வேண்டும்.

# புலம்பெயர் நாடுகளில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்

**கீர்த்திகன் சீவராஜா**

புலம்பெயர்ந்த நாடு என்றால், மக்கள் சொந்த நாட்டிலிருந்து வெளியேறி, வேறு ஒரு தேசத்தில் குடியேறி வாழுகின்ற நாடு ஆகும். பல பேருக்கு சொந்த நாட்டிலிருந்து, வெளிநாட்டுக்கு போவதற்கு பல காரணங்கள் உள்ளன. 'போர் வேண்டாம்' என்றும், படிப்புக்காகவும், திருமணத்திற்காகவும் மற்றும் சகோதர சகோதரியுடன் இருக்கவேண்டும் என்ற விருப்பமுமே சில காரணங்களாகும். ஆண்கள் இப்படியான பிரச்சனைகளை எதிர்நோக்குவது குறைவு. பெண்கள்தான் ஆண்களை விட இந்த பிரச்சனைகளை எதிர்நோக்குவார்கள். இளம் பெண்கள், தாய், சகோதரி, மற்றும் முதியோர் என்று 'பெண்கள்' வகையில் அடங்குவர். இப்படியாக இருக்கும் பெண்கள் புலம் பெயர் நாடுகளில் பல சவால்களையும், பிரச்சனைகளையும் எதிர்நோக்குகிறார்கள்.

சகோதரிகள், அல்லது இளம் பெண்கள் சொந்த நாட்டிலிருந்து வெளிநாட்டுக்கு வருவது முக்கிய காரணம் படிப்பு. அவர்களின் 'சொந்த நாட்டில் பெரிதாக வாய்ப்புகள் இல்லை' என்று நினைத்து, 'வெளி நாட்டில் இருக்கும்' என்று திட்டம் போட்டு வருவார்கள். இதில் சில பிரச்சனைகளை அவர்கள் எதிர்நோக்குவார்கள். இளம் பெண்கள், தனியே இருந்து சில வேலைகளைக் கவனிப்பது கடினம். உதாரணமாக, அவர்கள் வீட்டின் வாடகை, கட்டணங்கள், மற்றும் உணவுப் பொருட்களுக்கும் பணத்தைச் சேர்க்கவேண்டும். இதற்கு, அவர்கள் பகுதி நேர வேலைக்குச் போகவேண்டும். இப்படி வேலைக்குப் போய், படிப்பையும் கவனிக்கவேண்டும். இதைத்தவிர, வந்த புலம் பெயர்ந்த நாட்டின் இடங்களின் அறிவு தெரியாமலும், மொழி அறிவு குறைவாலும், வெளியே தனியே போவதற்கு பயப்படுவார்கள். உதாரணமாக, அவர்கள ஒரு இடத்தில் போகும் போது பாதை மாறிப் போய், ஆங்கிலமும் தெரியாமல் குழப்பத்துடன் மற்றும் பயத்துடன் இருப்பார்கள். இதைப்போல பிரச்சனைகள்தான் இளம் பெண்கள் எதிர்நோக்குகிறார்கள்.

அடுத்தது, திருமணத்திற்காக வெளி நாட்டுக்கு வருவதன் முக்கிய காரணம், அவர்கள் தமது இல்லற புது வாழ்க்கையை தொடங்குவதற்காக வருவார்கள். அவர்களின் சில பிரச்சனைகள், குடும்பத்தை பார்ப்பது, மற்றும் குழந்தை பெற்றுக்கொள்வது. தனது பிள்ளைகளுடன், கணவரின் பெற்றோர்களைக் கவனிப்பது போன்ற பிரச்சனைகள். அதாவது, சாப்பாடு சமைத்தல் மற்றும் வீட்டைச் சுத்தம் செய்தல், போன்ற தன் சொந்த வீட்டு வேலைகள், குழந்தை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் போன்ற பிரச்சனைகள். குழந்தை பெற்ற பின், குழந்தைக்கான உடுப்புகள், மற்றும் சாப்பாடுகள் செய்து குழந்தை பராமரித்தல் போன்ற பிரச்சனைகள் என்று தொடராக திருமணமான பெண்கள் எதிர்நோக்குவார்கள்.

தாய்மார்கள் சொந்த நாட்டிலிருந்து, வெளி நாட்டுக்கு வருவதின் முக்கிமான காரணங்கள் எதுவும் இல்லை. ஆனால் சில காரணங்கள், கணவருடன் இருப்பது, சொந்த நாட்டில் போரை விட்டு வருவது, என்று புலம் பெயர்ந்து வெளி நாட்டுக்கு வருவார்கள். இதில், அவர்களின் முக்கிய பிரச்சினை கணவரின் பெற்றோர்கள், சொந்த பெற்றோர்கள் மற்றும், சொந்தக்காரர்களையும் கவனித்து உதவி புரியவேண்டும். இதற்காக, அவர்கள் வேலைக்கு போய், கடுமையாக வேலை செய்து, வீட்டின் வேலைகளை கடுமையாக செய்து இருக்கவேண்டும். இதை அவர்கள் ஓய்வின்றி தமது உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் செய்துகொண்டே இருப்பார்கள்.

இதைத்தவிர, வயது முதிந்த தாய்மார், தமது பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் சேர்ந்து இருப்பதற்காக வருவார்கள். அதைவேளை, இத்தாய்மார்கள் தனது பேரப்பிள்ளைகளை கவனிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். அத்துடன், காலநிலை

மாற்றங்கள் காரணமாக, அவர்களின் உடல்நிலை ஒவ்வாமை பெரும் பிரச்சனையாக இருக்கும்.

பெண்களைத் தவிர, ஆண்களுக்கு இவற்றில் சில பிரச்சனைகள்தான் புலம் பெயர்ந்த நாடுகளில் இருக்க வாய்ப்புண்டு.

பொதுவாக எல்லா பெண்களும், கண்ணைக் காக்கும் இமைப் போல, அவர்களின் குடும்பத்தையும், தனது பெற்றோர்களையும், கணவரின் பெற்றோர்களையும், சகோதரர்களையும் பாதுகாத்து மற்றும் கவனித்து, அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல, எல்லா பிரச்சனைகளையும், துன்பங்களையும், சவால்களையும் பொறு மையாக சமாளித்து, அகமும் முகமும் மலர, புலம் பெயர்ந்த பெண்கள், புலம் பெயர்ந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## யார் உயிர் நண்பர்கள் ?


-விதுஷ் விஜயகுமார்-

இவர்கள் உங்கள் வாழ்க்கையில் உதவியும் மகிழ்ச்சியும் தருபவர்கள் தந்தவர்கள். சிறு வயதில் அவர்களுடன் ஒவ்வொரு நாளும் பாடசாலையில் கோயிலில் பூங்காக்களில் விளையாடி இருப்பீர்கள் எனக்காக சோக நேரத்தில் வந்து நிற்பார்கள், மகிழ்ச்சியான தருணங்களில் கூட வந்து நிற்பார்கள் வாழ்க்கையில் இவர்கள் இல்லாமல் வாழ்க்கையில்லை.

நூறு நண்பர்களை விட ஒரு நல்ல உயிர் நண்பன் வைத்திருப்பதென்பது மேலானது. இதனை மேற் கோள் காட்டி ஒரு கதை இருக்கிறது நீங்களும் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஒரு நாள் இரண்டு நண்பர்கள் காட்டு வழியாக நடந்து வந்தார்கள். பேசிக் கொண்டே நடந்தார்கள் தீடீர் என கணீர் என்ற சத்தம் கேட்டது. அக்கம் பக்கம் பார்த்தார்கள் பெரிய கரடி ஒன்று தம்மை நோக்கி வருவதைக் கண்டார்கள் செய்வதறியாது திகைத்தனர் இருவரும் ஒருவன் சொன்னான் ஓடிப்போய் மரத்தில் ஏறிக் கொள்வோம் என கூறி ஓடிப்போய் ஏறிக் கொண்டான் மற்றவருக்கு மரத்தில் ஏறத் தெரிய வில்லை செய்வதறியாது திகைத்து நின்றான் கரடி நெருங்கி விட்டது தீடீரென விழுந்து இறந்தவன் போல் படுத்துக் கிடந்தான். கரடி அவனுக்கு கிட்டே வந்தது மணந்து மணந்து பார்த்தது மூச்சு எதுவும் வரவில்லை. இறந்து விட்டது என எண்ணி கரடி போய் விட்டது. கரடி போனதை கண்ட மரத்தில் இருந்த நண்பன் ஓடி வந்தான். நண்பா என்ன ஆச்சுது என இவன் சொன்னான் ஒன்று ஆகாவில்லை நண்பா என்று இல்லை உன் காதோரம் கரடி ஏதோ சொன்னதே அது என்ன சொன்னது? அதுவா அது.....................

கரடி சொன்னது உயிர் நண்பர்களை பற்றி "உயிர் நண்பர்கள் உன்னை தனியாக விட்டு ஓட மாட்டார்கள்" எனச் சொன்னது.


இந்த கதை உயிர் நண்பர்களுக்கு ஒரு எடுத்து காட்டு. இறுதியாக முடிப்பதற்கு முன் ஒரு கேள்வி உங்கள் நண்பர்கள் உயிர் நண்பர்களா ??



அபிஷாலினி
ஜோரச்
பாரதி பள்ளி
படம்
கடம்
அக்கா
பகல்
பலர்
பந்தயம்
கல்
மகள்
பூ
கண்
பப்படம்
நடனம்
மடம்
நாய்

## ஆஸ்திரேலியா காப்போம்

கங்காரு தாவித் தாவி சென்றது, இமியு பறக்க முயற்சி செய்தது. மத்திய ஆஸ்திரேலியாவில் சிவப்பு மணற்கல் உலுரு (uluru), மேற்கில் கனிமங்களுக்கான சுரங்கங்கள், கிழக்கில் பவளப் பாறைகள், தெற்கில் திராட்சைத் தோட்டம், என பல இயற்கை அழகு நிறைந்த நாடு நான் வளரும் ஆஸ்திரேலியா ஆகும். ஆனி 2018 முதல் ஆஸ்திரேலியா மாநிலங்கள் பிளாஸ்டிக் பை பாவனையை தடை செய்தன. பிளாஸ்டிக் பாவனையை குறைப்போம். இயற்கை அழகை காப்போம்.

கவின் சத்தியசுதன்







நான்

எனது பெயர் மெலனி.
எனக்கு பிடித்த நிறம் சிவப்பு.
எனக்கு பிடித்த உணவு இட்லி.
எனது நண்பி பெயர் அபி.
எனது செல்லப்பிராணி நாய்.
எனக்கு பிடித்த விளையாட்டு கூடைப்பந்து.

மெலனி முகுந்தன்
பாரதி பள்ளி

# மீன்





எனது பெயர் மீன்! என்னை மனிதர்கள் மீன் என்று அழைப்பார்கள், உணவாகவும் உண்பார்கள். எனது உடல் செதில்களால் மூடப்பட்டுள்ளது. எனது துடுப்புக்களும் வாலும் நீந்துவதற்கு உதவுகின்றன.
நான் நீரில் மட்டும் வாழ்வேன்.

சந்யா சுரேஷ்
வயது - 9

*சந்யா சுரேஷ் (வயது 9)*

# விபரீதம்

-தி. கணேஸ்வரன்-

சித்திரை வைகாசி மாதங்கள் தமிழகத்தில் இளவேனிற் காலமாகும். இந்த இன்பகரமான காலத்தை விபரிக்கும் இளங்கோ

“கோதை மாதவி, கொழுங்கொடி எடுப்பக்
காவு கானமும் கடிமலர் ஏந்தத்
தென்னவன் பொதியில் தென்றலொடு புகுந்து”

காதலருக்கு இன்பம் கொடுப்பதாகப் பாடுகிறார். கோவலனும் மாதவியும் இளவேனிற் காலத்தில் கூடிப் பிரிவதை விவரிக்கும் பாடல்கள் கானல் வரி எனப்படும். இக் கட்டுரை, பாத்திரங்களிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளை ஆராயும் நோக்கோடு எழுதப்பட்டது. கானல் வரியில் ஏனைய தலைவி, தோழி, பாங்கன் பாடல்களைத் தவிர்த்து, கோவலன், மாதவி சம்பந்தப்பட்ட பாடல்கள் சில ஆராயப்படும். பூம்புகார் மக்கள் இளவேனிலை வரவேற்கும் பொருட்டு, காவேரியில் புகர் முகச் சூழலில் கடற்கரையிலே விழாக்கோலம் கொள்வது வழக்கமே. இந்தச் சூழலில் கோவலனும் மாதவியும் கானல் வரி பாடுகின்றனர். கூடலும் ஊடலும் நடக்கும் இந் நாட்களில், கண்ணகி கணவனின் பிரிவால் துயரப்படுகிறாள்.

**கானல் வரி**

முதலில் கானல் வரி பாடிய மாதவி, யாழை கோவலனிடம் நீட்ட அவனும், மாதவியை மகிழ்விக்க காவிரியை கருத்தாக அமைத்து கானல் வரி பாடினான்.

“திங்கள் மாலை வெண்குடையான்,
சென்னி செங்கோல் – அது ஓச்சிக்
கங்கை – தன்னைப் புணர்ந்தாலும்,
புலவா தொழிதல்,. கயற்கண்ணாய்!
மங்கை மாதர் பெருங் கற்பு என்று
அறிந்தேன், வாழி, காவேரி!”

“மன்னும் மாலை வெண்குடையான்,
வளையாச் செங்கோல் – அது ஓச்சிக்
கன்னி – தன்னைப் புணர்ந்தாலும்,
புலவாய் தொழிதல், கயற்கண்ணாய்!
மன்னும் மாதர் பெருங கற்பு என்று
அறிந்தேன். வாழி காவேரி!”

சோழன் செங்கோல் செலுத்தி கங்கையைச் சேர்ந்தான். தெற்கே அவன் குமரியுடன் கூடினான். நீ அவனை வெறுக்க மாட்டாய். இதற்கு உனது பெருங் கற்பே காரணம் என்று பாடுகின்றான்.

கோவலனும் கண்ணகியும் செல்வம் நிறைந்த வணிகக் குடும்பத்தில் பிறந்து, பெற்றோர்களால் மணம் முடிக்கப் பெற்றவர்கள். கண்ணகி திருமகளின் புகழும் பொலிவும் பெற்றவள். ”தீதிலா வடமீனின் திறம் இவன் திறம்” என்று போற்றப்பட்டவள். கோவலன், ”மண் தேய்த்த புகழினன்”

என்றும் ''செவ்வேள்'' என்றும் பாராட்டப்பட்டவன். அடி மனத்து உறுத்தும் உணர்வுகள் அவனுக்கு தெரியாமலே பாடலில் தொனிக்கிறது. களவொழுக்கத்தில் ஈடுபடும் கோவலன் கற்பு ஒழுக்கம் பேசுகிறான்.

இந்த மாறுபட்ட உணர்வுகளை மதிநுட்பம் நிறைந்த மாதவி கண்டு, யாழை வாங்கி காதலால் மகிழ்ந்தாள் போல் ஊடலுடன் பாடுகின்றாள்.

*"மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப,*
*மணிப் பூ ஆடை அது போர்த்துக்*
*கருங்கயல் – கண் விழித்து, ஒல்கி*
*நடந்தாய், வாழி காவேரி!*
*கருங்கயல் – கண் விழித்து, ஒல்கி*
*நடந்த எல்லாம் நின் கணவன்*
*திருந்து செங்கோல் வளையாமை,*
*அறிந்தேன், வாழி காவேரி!"*

*"பூவர் சோலை மயில் ஆடப்*
*பரிந்து குயில்கள் இசை பாடக்*
*காமர் மாலை அருகு அசைய,*
*நடந்தாய் வாழி, காவேரி!*
*காமர் மாலை அருகு அசைய,*
*நடந்த எல்லாம் நின் கணவன்*
*நாம வேலின் திறம் கண்டே!*
*அறிந்தேன், வாழி, காவேரி!"*

காவேரி சோழனை விரும்புவதற்குக் காரணம் சோழனின் நற் பண்புகளே என்று மாதவி வற்புறுத்துகிறாள்.

**விரிசல் விரிகிறது**

மாலை நேரமும் அண்மிக்கின்றது. கணவனைப் பிரிந்த பெண்கள் மாலை நேரத்தில் பிரிவுத் துயரத்தை அனுபவிப்பர். மாதவி பிரிவுத் துயரத்தை விளக்கும் பாடல் ஒன்றைப் பாடுகின்றாள்.

"பையுள் நோய் கூரப், பகல் செய்வான் போய் வீழ
வையமோ கண் புதைப்ப, வந்தாய் மருள் மாலை!
மாலை நீ ஆயின், மணந்தார் அவர் ஆயின்,
ஞாலமோ நல் கூர்ந்தது, வாழி, மாலை!"

பிரிவுத் துயரத்தினால் காம நோய் அனுபவிக்கும் பெண்ணின் மன நிலையைக் கூறும் பாடலைக் கேட்ட கோவலன், தான் கானல் வரி பாட, மாயம் நிறைந்த மாதவி பிறிதொருவன் மேல் மனம் வைத்துப் பாடினாள் என்று நினைத்து, மாதவியின் கைப் பிணைப்பை நெகிழ விட்டான். பின்பு தனது ஏவலாளருடன் தனியே சென்றான். மாதவியின் தோழிகள் கலக்கமுற, மாதவி தனியே தன் மனை சென்றாள். இந்தச் சம்பவம் ஊழ் வினையால் வந்தது என்று இளங்கோ பாடுகின்றார். சிலப்பதிகாரத்தின் திருப்பு முனையை காவிரிக் கரையில் இளங்கோ அமைக்கின்றார். ஓசை நயம் நிறைந்த இப் பாடல்கள் மன உணர்ச்சிகளை நுணுக்கமாக வெளிப்படுத்துவது நோக்கத்தக்கது.


கனிஹா முகுந்தன் பாரதி பள்ளி விண்டல்
தமிழ்
tamil


தமிழ்
கனிஹா முகுந்தன்
பாரதி பள்ளி


நிலானி – மு
ஆண்டு – 4
முட்டை
கம்பளிப்புழு
ஒரு பட்டாம்பூச்சி
வாழ்க்கை சுழற்சி!
கூட்டுப் புழு
வண்ணாத்துப்
பூச்சி

## நீ வாழ் தமிழனாக

செந்நிற மேனியும் பொன் விளை பூமியும்
நாம் பிறந்த பொன்நாடு
கண்மணிக் கதிர் வயல்களும் காய்கறித் தோட்டமும்
கனிரசக் களஞ்சியமும் எம்நாடு

கதைகளும் கட்டுரையும் கவிதைகளும் கீர்த்தனையும்
தமிழ் மாந்தர் காதுகளைத் துளைத்ததுவும் எம்நாடு
ஓங்கி வளரும் கலையை தலையில் தாங்கி
வளர்ப்பதுவும் எம்பொன்நாடு

பெய்யும் கொடையாளர் பெருங்கல்விப் பேறுடையோர்
பொய்யாமல் வாழ்ந்ததுவும் எம்நாடு
ஆதி நீதி முறை ஆட்சி செய்ததுவும் – சோதி
இறையருள் ஆறு பாய்ந்ததுவும் எம் திருநாடு

புலம் பெயர்ந்தாய் புது வாழ்வு காண்பதற்கு
பெற்றாய் சில, இழந்தாய் பல
அழகிய வாகனங்கள், அரண்மனை போல் இல்லங்கள்
பட்டப் படிப்பிற்கோ பல பல்கலைக்கழகங்கள்
நடனம், நாட்டியம், கடம், மிருதங்கம்
கற்கும் கலைக்கூடங்களும் மெத்தவுண்டு
சத்துணவு பஞ்சமில்லை, சத்திர சிகிச்சைக் குறையுமில்லை
சங்கங்கள் பல, சந்தோஷங்களும் தாராளம்

வீழ்வுற்றாய் தமிழா! அட நின் தாயென்னும் தமிழ் வெறுத்தாய்
பாழ்பட்டாய் பிறநாட்டான் இசைக்கூத்தனைத்தும்
நீ ஏற்றாய், கெட்டாய்
தாழ்வுற்றாய் அடையாளம் இழந்தன்றோ நிற்கின்றாய்!
உலகனைத்தும் ஏழெட்டாய் இனம் மாறி
அழிவாயோ நின் எண்ணம் மாற்று

கடவுளை மறந்தாய், காலிப்பயல்களைக் கொண்டாய்
அன்புள்ள அம்மா, அப்பா அம்மி தடியானார்கள்
ஆசையாய் முதல் எழுத்து தேர்ந்தெடுத்து
ஆர்வமாய் எண் சாஸ்திரம் கணக்கிட்டு சூட்டிய பலநாமங்கள்

அகலத்தால் குறைந்து, நீளத்தால் நெருக்கி
அலங்கோலமாய்க் கூனிக் குறுகி நிற்கின்றதே
ஆடையில் அரைகுறை, தலைமுடியில் பலவர்ணம்
பதினெட்டே ஆகுமுன் வாயில் புகை, கையில் மதுக்கிண்ணம்
தோளினை அனைக்கும் தோழர் தோழிகள் கரங்கள்

— — –

முதியோரை மதிக்கவில்லை, பெற்றோரை பேணவில்லை
ஐயகோ! எத்தனை மாற்றங்கள், கோலங்கள்
பெற்றவள் மனம் எரிகிறாள் பெரும் தீயை
அவள் நெஞ்சில் மூட்டிவிட்டாய்!

பிள்ளை, நீ எவன் மண்ணில் பிறந்தாலும் தமிழ் பிள்ளையன்றோ
புள்ளிக்குயில் காக்கைக் கூட்டில் பிறந்தாலும்
காக்கையின் குள்ளக்குரல் கொண்டு கரையுமோ?
பிறன் வாய்ச் சொல் கொஞ்சலாமோ?

அல்லவை அறுத்து, நல்லவை தெரிந்து நயப்புடன் ஏற்று
நீ நடந்தால் நானிலம் உனைப்போற்றும்
நல்லவை தவிர்த்து அல்லவை கொண்டாய்
வசையுற்றாய் தமிழா, வேண்டாம் உன்
கொள்கையை தவிர்த்துவிடு!
நின் நினைவெல்லாம் தமிழன் பண்பாட்டின் நினைவாக
நெஞ்சமெலாம் நிறைந்து நீ வாழ் நற்தமிழனாக

ஆக்கம்: திருமதி. ராணி தங்கராசா

# இணையதளத்தின் நன்மைகளும் தீமைகளும்

**-வைஷ்ணவி சுகந்தன்-**


நாங்கள் ஒவ்வொரு நாளும் இணையதளத்தை பல தேவைகளுக்காக பயன்படுத்துகிறோம். நம் மனிதர்களை மாதிரி இணையதளமும் காலத்திற்கேற்ப முன்னேறிக்கொண்டு வருகின்றது. இருந்தாலும், இணையதளத்தைபாவிப்பதால் நன்மைகளும் தீமைகளும் இருக்கின்றன.

இப்போது, இணையதளம் எங்களை பல்வேறு மக்களுடன் இணைக்கின்றது. உலகத்தை சுற்றி இருக்கின்ற மக்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி, அவர்களுடைய குடும்பத்தார்களுடனும் நண்பர்களுடனும் இணைந்து கொள்ள முடியும். ஆனால், இத்ல் தீமைகளும் இருக்கின்றது. மக்கள் சமூக வலைத்தளங்களில் இணைந்துகொண்டிருப்பதால் அவர்கள் தெரியாதவர்களுடன் கலந்துகொள்ள முடியும். கவனமாக இருந்து தெரியாதவர்களுடன் கதைக்காமல் இருந்தாலும், அருகில் இருக்கின்ற உறவுகளுடன் உரையாடல் இருக்காது. இதனால் குடும்பங்களுள் உரையாடல்கள் இன்றி பிரச்சனைகள் உருவாகின்றன.

நாங்கள் இணையதளத்தில் நல்ல காணொளிகளும் படங்களும் பார்க்கலாம். நாங்கள் எமது படிப்பு சம்பந்தமான காணொளிகளையும் படங்களையும் தேடி பார்த்து தகவல்களை அறியலாம். ஆனால் சில வன்முறை கொண்ட விவகாரமான காணொளிகளையும் படங்களையும் பகிர்ந்துகொள்வார்கள். இதனால் வன்முறை நிகழ்வுகளின் சதவீதம் உயர்ந்துகொண்டு வருகிறது.

நாங்கள் இணையதளத்தைப் பயன்படுத்தி செய்திகளை ஆராய்ச்சி செய்லோம். நாங்கள் பள்ளி வீட்டுப்பாடத்தைப் படிக்க எங்களுக்கு உதவியாக இணையதளத்தைப் பயன்படுத்துவோம். எங்களுக்குத் தேவைப்படும் செய்திகள் எல்லாம் இணையதளத்தில் தேடி காணப்படலாம். ஆனால் எல்லா நேரத்திலும் இணையதளத்தை நம்பிக்கொண்டிருந்தால், சுய அறிவு இன்றி சோம்பேறியாவார்கள். அவர்களுக்கு இணையதளம் உபயோகம் இல்லாவிடில் அவர்களுக்கு வேலைகளில் செய்ய கஸ்ரப்படும் நிலை வருகிறது.

இதனால் இணையதளத்தில் தீமைகள் இருந்தாலும் நன்மைகள் எதிரீடு செய்கிறது. இணையதளம் நிறைய நிறுவனங்களிலும் சமூகங்களிலும் ஒரு முக்கிய கருவியாக அமைகிறது. இணையதளம் மனிதர்களுடனும் இந்த சமுதாயத்தில் வளர்ந்து முன்னேறிச் செல்வது வரவேற்கத்தக்க விடயமாக அமைகிறது.



# கதி

'கதி' (Kathy) அதுதான் அவள் பெயர். மூளைக் கோளாறு நோயின் தாக்கத்தால் சாதாரண மனிதருடைய குணங்களிலிருந்து வேறுபட்டிருந்தாள். வித்தியாசமான், தன் உடலுக்கும் வயதிற்கும் பொருந்தாத உடைகள் உடுத்துவது அவள் குணாதிசயம். சில தடவைகள் பழைய சிறுவர் படங்களில் வரும் கதாபாத்திரங்கள் போல் உடுப்புகள் அணிவாள். தலை முடி கடும் ஊதா, கடும் பச்சை, மெல்லிய சிவப்பு, ஆரேஞ்சு நிறம் இப்படி பல வர்ணங்களில் இருக்கும். மூளை செயற்பாடு குறைந்த இவளிடம் எல்லோரும் வெகு தாழ்வாக பேசுவது கேலி செய்வது எல்லாம் வழக்கமான கதைகள்.

அன்றொரு நாள் நான் வேலை இடத்துக்கு அண்மையில் உள்ள கடை ஒன்றுக்கு போய் கொண்டு இருந்த போது வீதியில் அவளை சந்தித்தேன். கையில் அழுக்கான பேப்பர் துண்டுகள், பிளாஸ்டிக் துண்டுகள். நிலத்தில் இருந்த இன்னொரு அழுக்குப் பேப்பரை வலது கையால் எடுத்து மற்றத் துண்டுகளுடன் சேர்த்துக் கொண்டாள். "கதி, ஏன் இந்த அழுக்குகளை தொடுகிறாய்?" என்று கடுப்பாக கேட்டேன். "என்னை போல் மூளையற்ற சிலர் இப்படி நிலத்தை அசுத்தம் பண்ணுகிறார்கள். பாவம் மீன்கள் கஷ்டப்படுங்கள்" என்றாள். "கொடு அதை குப்பையில் போடுகிறேன். போனதும் கை அலம்ப வேண்டும் மறந்துவிடாதே" என்றேன். நான் பேசுவதை பாதி காதில் போட்டபடி பொருட்களை குப்பை தொட்டியில் போட்டாள்.



சில நாட்களின் பின் TV இல் வந்த சுகாதார அசுத்தங்களால் மீன்கள் பாதிக்கப்படும் ஆவண படத்தை பார்த்தேன். அன்று முதல் நானும் அவள் போல் பாதையில் கண்ணில் படும் குப்பைகளை பொறுக்கத் தொடங்கினேன். ஒரு வித்தியாசம், ஒரு முறை நடக்கும் பொழுது 3 – 5 குப்பைகள் என்று ஒரு கணக்கு வைத்துக் கொண்டேன்.

சில நாட்களுக்கு முன் என் நாளாந்த உடல் பயிற்சிக்காக நடந்த பொழுது என்னைப் போல் இன்னொரு நபர் பாதை குப்பைகளை பொறுக்குவதை பார்த்தேன். "நானும் உங்கள் அபிமானி" என்னிடம் கூறினார். என் மனது கதியை நினைவு கூர்ந்தது புகழ் எல்லாம் போகட்டும் கதிக்கே என்று கூறியது.

ஆக்கம் ~ சுலோ

ஓவியம்
வந்தனா, வி.

## பதினெட்டு வயதினிலே

-நித்தியா பத்மசிறி-

*பதினெட்டு வயதை எட்டிவிட்டால்*
*பிள்ளைகள் படும் பாட்டை*
*தினெட்டு வயதை தாண்டிய நான்*
*பகிருகிகிறேன் உங்களுடன்*

*பன்னிரண்டரம் வகுப்பு வந்தால்*
*படிப்பு சுமை ஒருபக்கம் - அதைதவிட*
*பல சோலிகள் மறுபக்கம்*
*பிள்ளைகள் பலரைத் தேடிவரும்,*

*பருவ வயதை அடைந்துவிடடால்*
*பிள்ளைகளே பிரச்னை என்று*
*வெள்ளையர் சொல்லுவதை கேட்டு*
*வெருண்டடிப்பார் எம் பெற்றோர்.*

*ஒரு துறையை நான் தேடி*
*ஊக்கமாக படிப்போம் என்றால்*
*"மெமடிசின் ஏன் படிக்கவில்லை?"*
*என்று ஆர்வமாக கேட்பர் பலர்,*

*அனால்,*
*எனது நண்பி படிப்பதுவோ*
*எலோரும் ரும் விரும்பும் மெமடிசின் என்றால்*
*"அவள் பிடிப்பாரா ? " என்று*
*மாறி கூறுபவர் அவரில் சிலர்*

*பெற்றோரின் அக்கறை தாண்டி*
*ஆசிரியர் அறிவுரைக்கும் மேல்*
*அடுத்தவரின்' ஆர்வம் தான்- சிலசமயம்*
*எரிச்சலடைய செய்துவிடும் ,*

*வெளிநாட்டில் பிறந்து விட்டால்*
*வெள்ளையர் போல் வாழ வேண்டும்*
*என்று நினைக்கும் பிள்ளைகள்தான்*
*ஏனோ சிக்கித் தவிப்பர்*

உலகமெல்லாம் மாறும் போது
உடையை மாற்ற வேண்டும் என்று
கண்ணியத்தை மறந்து சிலர்
கட்டுடை உடுத்துவர்

பதினெட்டு வயதினிலே
மது அருந்த தெரியரவிட்டால்
மதிப்பில்லை என்று எண்ணி
மதுப்போத்தல் தூக்கிடுவர்

வளர்ந்த பிள்ளை தனக்கொரு
துணையல்லோ வேண்டும் என்று
தேவையில்லா தொடர்புகளை
தேடிக்கொண்டு மாட்டி தவிப்பர்

சாரதி அனுமதி பாத்திரம் வந்தால்
வேகமாக ஓட்டி சிலர்
வீண் விபத்தில் மாட்டி - அங்கே
வாழ்வையே முடித்திடுவர்

சிறுவயதில் இருந்து முதல்
நல்ல நல்ல பழக்கங்களை
தன் வாழ்வில் கடைபிடிக்கும்
நல்ல பிள்ளை கெட்டதில்லை

பெற்றோரின் அன்புடனும் - நல்ல
நண்பர்களின் துனணயுடனும்
படிப்பதுவோ கஷ்டமில்லை - வீண்
பழக்கங்களும் வருவதில்லை

பதினெட்டு வயதென்பது
ஒரு முனற தான் வந்து போகும் - எனவே
படித்து பலன் பெற்றிடுவோம்
பண்புடனே வாழ்ந்திடுவோம் .

# உயிரோடு கலந்த உறவுகள்

-சியாமளா யோகேஸ்வரன்-

அடித்தாலும் பிரிக்கமுடியாத தண்ணீர் போன்று, இரத்தத்தால் இணைந்த உறவுகள் என்பது என்றும் எம்முணர்வோடு ஒட்டி நின்று உயிரோடு கலந்திருக்கும் ஒரு உன்னதமான பந்தமாகும். விவாகத்தை ரத்துச் செய்து காலாவதியாக்க முடியும், நட்பைத் துண்டித்துக் கொண்டு நண்பர்களிடமிருந்து முற்றிலுமாய் ஒதுங்கிக்கொள்ள முடியும், ஆனால் பெற்றெடுத்த தாய் தந்தையரையும், ஒரே ரத்தத்தைப் பகிர்ந்து கொண்ட சகோதரபந்தத்தையும் அறுத்து விடுவதற்கு இந்த உலகில் எந்தச்சக்தியுமேயில்லை. இல்லையென்று முறித்துக் கொண்டாலும், உறவே வேண்டாமென்று ஒதுங்கிக் கொண்டாலும் காலப்போக்கில் மனக்காயங்கள் ஆறி விட பழைய அன்பு தானாகவே ஊற்றெடுத்துக் கொள்ளும். பிறப்போடு தோன்றிய இந்தப் பந்தத்திற்கு, இறப்பொன்று மட்டுமே முற்றுப்புள்ளியொன்றை வைத்துச் செல்கிறது.

குழந்தைப்பராயத்தில் பொம்மைகளுக்காக அடிபட்டிருப்போம், அறியாப் பராயத்தில் இனிப்புக்காகவோ, புத்தகத்துக்காகவோ அல்லது பென்சிலுக்காகவோ அடிபட்டிருப்போம். இரண்டு நாட்களுக்குப் பேசாமல் முகத்தைத் தூக்கிக் கொண்டு திரிந்திருப்போம். ஆளும் வளர, அறிவும் வளர்ந்து மனதில் பக்குவமும் வந்தபின், ஒரே கூட்டில் வாழும் பறவைகளாய், உறவின் அருமை புரிந்து அன்பைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கியிருப்போம். காலப்போக்கில் தோற்றத்தில் மட்டுமல்ல உணர்வுகளிலும் மாற்றங்கள் வந்தபோதும் அன்பில் வேறுபாடு கண்டதில்லை. வளரும் போது உணவைப் பகிர்ந்து கொண்டு, உடைகளைப் பகிர்ந்து கொண்டு, உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு குடும்பம் என்ற பிணைப்புத் தரும் கதகதப்பை புரிந்து கொள்ளத்தொடங்கியிருப்போம். தம்பியுள்ளவன் சண்டைக்கஞ்சான் என்பது போல தோள்களை நிமிர்த்திக் கொண்டு பெருமையுடன் திரிந்திருப்போம். பெண்ணென்றால், அண்ணனோ தம்பியோ துணைக்கு இருக்கிறான் யாரும் வாலாட்ட முடியாது என்றதொரு பாதுகாப்பு உணர்வில் தெருவில் இறங்கியிருப்போம். தங்கையோ, அக்காவோ எச்சந்தர்ப்பத்திலும் மனதுக்கு உறுதி தந்து நம்மை நிமிர்த்தி வைத்திருப்பாள் என்பது தன்னம்பிக்கையைத் தர தலை நிமிர்ந்து நடந்திருப்போம். ஒருவரின் வெற்றி தோல்வியில் பங்கு கொண்டு, ஆம்பிளை என்று எங்கள் கலாசாரம் கொடுக்கும் முன்னுரிமையில் ஆண் சகோதரங்களுக்கு உணவு பரிமாறி, உடைகளைக் கழுவிப்போட்டு பெறாத ஒரு அன்னையாகவே நடந்திருப்போம். பெற்றோர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியாத ரகசியங்களைக் கூட அவர்களுடன் பகிர்ந்து கொண்டு, எம்மனச்சுமைகளை இறக்கி வைத்திருப்போம். அவர்களின் வெற்றியை நாம் பெற்ற வெற்றியாகவே எண்ணி களிப்புடன் கொண்டாடி மகிழ்ந்திருப்போம்.

பிரச்சனைகள் இல்லாமல் வாழ்க்கையில்லை என்பது போல், அவ்வப்போது முளை விடும் பூசல்கள் காற்றோடு கரைந்து உடனேயே காலாவதியாகி விட்டிருக்கின்றன. அப்போது வந்த உரசல்கள் எல்லாம் மனதோடு நின்று வலித்ததில்லை, உயிர்வரைச் சென்று உருக்கியதில்லை. ஆனால் என்று இந்தத் திருமணம் என்ற பந்தத்தில் அனைவருக்கும் அடுத்ததொரு நெருக்கமான உறவு தோன்றி இன்னொரு குடும்பம் என்ற கூட்டில் வாழத் தொடங்கினோமோ அன்றே மனதளவில் ஒரு சிறு இடைவெளி தோன்றி விடுகிறது. ஒரே கூட்டில் வளர்ந்த உள்ளங்கள் கூட, எனது குடும்பம் வேறு, உனது குடும்பம் வேறு என்று என்று வேறுபடுத்தக் கற்றுக் கொண்டு விடுகின்றன. நான் வேறு நீ வேறு என்று வேறுபடுத்திப் பார்க்கத்தெரிந்ததால் கடுகளவுப் பிரச்சனை கூட மலையாகத் தெரிகிறது.

இன்று மணம் முடித்து ஆளுக்கொரு பக்கமாய் நாட்டுக்கொருவராய், குடும்பம் என்று வாழத்தொடங்கிய பின்னர் ஒற்றை வார்த்தைகள் கூட வேறான அர்த்தத்தைத் தருகின்றன. உள்ளத்தோடு ஒட்டி நின்று உயிரைக்குடைந்து கொல்கின்றன. மனம் விட்டுப் பேசித்தீர்க்க முடியாத அளவுக்கு மனதுக்குள் நின்று தடுக்கும் ஈகோ எப்போது வந்து சேர்ந்து கொண்டது? எங்கே முளை விட்டது இந்த அந்நியத்தன்மை? எப்போது தோன்றியது இந்த இடைவெளி?

முன்னைய காலத்தில் வாய்க்கும் வயிறுக்குமே சரியாக இருந்த போது கூட ஆண்மகன் தன் பெற்றோரைப்பராமரித்துக் கொண்டு, இருந்ததெல்லாம் போட்டுக்கட்டி, இன்னமும் போதாததுக்கு கடனை, உடனை வாங்கி பெண் சகோதரங்களை மணம் முடித்துக் கொடுத்தபின்னும், ஓய்ந்து கொள்ள முடியாமல் அதன் பின்னும் செய்யவேண்டிய கடமைகளை முகம் சுளிக்காமல் செய்த காலமெல்லாம் இன்று மலையேறி விட்டது. ஆணுக்கு நிகராகப் பெண் படிப்பிலும் வாழ்விலும் உயர்ந்து வாழும்போது, ஆண்களின் முதுகில் பெண்சகோதரங்களின் பொறுப்பைச் சுமையேற்றும் பழக்கமும் அருகித்தான் விட்டது. அவரவருக்கென்று ஒரு குடும்பம், குழந்தைகள், அதில் ஆயிரம் குழப்பங்கள் என்று அத்தனையும் தவறாது இருக்கத்தான் செய்யும். இதற்காக அன்பிலும் உறவிலும் இடைவெளி ஒன்று விழத்தான் வேண்டுமா? மணம் முடித்துப் போனாலும் பெண்களின் உள்ளத்தில் பிறந்தவீட்டுப் பாசத்தில் எந்தக் குறையும் வந்து விடுவதில்லை. ஆனால் மணம் முடித்துப் போன ஆண்களுக்கு உள்ள இயல்பான மறதியுடன் வந்தவளும் தாங்கிக்கொள்ள பிறந்தவீடு சற்று அந்நியமாய்தான் போய் விடுகிறது.

தனது சகோதரங்களிடம் பழைய பாசத்தை எதிர்பார்க்கும் அதே பெண்தான் கணவன் தன் வீட்டாரிடம் பாசம் காட்டுவதை கொஞ்சம் விரோதத்துடன் பார்க்கிறாள். எதையாவது அள்ளிக்கொடுத்து விடுவானோ என்ற பயத்துடன் கணவனின் பாசத்தில் யாரும் பங்கு வைத்து விடக்கூடாதென்ற பொறாமை உணர்வும் தலை தூக்கி ஆட, இது மட்டுமே உனது குடும்பம் என்ற உணர்வை ஆணின் மனதில் அழுத்தமாகப்பதிய வைக்க முனைகிறாள். தன் சொந்தம் என்று உரிமை கொண்டாடும் அந்த ஆணுக்கு உயிர் கொடுத்து உருவம் கொடுத்த பெற்றோரும், சுகதுக்கங்களில் பங்கு கொண்டு உரிமை கொண்டாடி உறவாடி வளர்ந்த உடன் பிறப்புகளும் இல்லையெனின் தனக்கு ஒரு அருமையான கணவன் கிடைத்திருக்க முடியாது என்ற ஆணித்தரமான உண்மையை மணமான அத்தனை பெண்களுமே மறந்துதான் விடுகிறார்கள்.

கூடப்பிறந்தவர்களின் பிறந்தநாளைக் குதூகலத்துடன் கொண்டாடிய நாட்கள் போய் அவர்களின் பிறந்தநாள் கூட மனதினின்றும் மறந்து மங்கிப்போய் விடுகிறது. மறந்து விட்டோம் என்று சொல்வதிலேயே உறவின் முக்கியத்துவத்தை இழந்து விட்டோமோ என்ற ஒரு கலக்கமே முதலில் தோன்றுகிறது. உறவுகள் பேணப்படுவதில் பெண்ணுக்கும் ஆணுக்குமே சரிசமனான பங்கிருக்கிறது. நாம் எமது சகோதரங்களிடமோ பெற்றோரிடமோ இருந்து எதிர்பார்க்கும் அதே அன்பை கணவனின் பக்கத்திலிருந்து அனைவரும் எதிர்ப்பார்ப்பார்கள் என்ற நிதர்சனமான உண்மையை ஏற்றுக்கொண்டு, அதை மதிக்கக்கற்றுக் கொண்டு விட்டோமானால் இருவர் பக்கத்திலும் அன்பும் அமைதியும் என்றும் நிலைத்திருக்கும். எல்லோருமே பொருளாதார ரீதியில் நல்ல ஒரு நிலையில் வாழும்போது பணம் மற்றும் பொருட்களின் பரிமாற்றத்துக்கு அவசியமிருக்காது. அங்கு உறவுகள் நாடுவதும் எதிர்பார்ப்பதும் உண்மையான ஒரு அன்பை மட்டுமே. தாங்கிக் கொள்ள பெற்றவர்களும் சகோதரர்களும் இருக்கிறார்கள் என்ற உணர்வு வாழ்க்கை வண்டியின் சீரான ஓட்டத்துக்கு துணை செய்வது மட்டுமல்லாமல், பிரச்சனைகளுக்கு கை கொடுக்க உறவுகள் இருக்கின்றன என்ற மனபலத்தையும் கொடுத்து விடுகிறது.

தன் வீட்டினரின் விசேடங்களை ஞாபகம் வைத்து கணவர், குழந்தைகள் என்று அனைவரையும் வாழ்த்துச் சொல்லவைக்கும் பெண்கள், திருமணநாளைக்கூட மறந்து மாட்டிக் கொள்ளும் கணவனுக்கு அவன்

வீட்டினரின் விசேடங்களை ஞாபகப்படுத்தி வாழ்த்துச்சொல்ல வைக்கலாம். பெரும்பாலும் நல்ல தினங்களில் நெருக்கமான உறவுகளின் மனம் நிறைந்த வாழ்த்துக்கள் கொடுக்கும் மகிழ்ச்சிக்கு எதுவும் ஈடாக முடியாது. அதே போன்று வயிற்றில் சுமந்து, பின் மனதில் சுமந்து எமக்காகவே தம் சுகங்களைத் தியாகம் செய்த பெற்றோரினதும், ஒரே உதரத்தில் உதித்து ஒன்றாகவே சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்ட கூடப்பிறந்தவர்களினதும் மனதை நோக வைப்பது நம் நல்வாழ்வுக்கு என்றும் துணை புரியாது. ஒட்டிக்கொண்ட நெருஞ்சி முள்ளாக நெருடிக் கொண்டு நம் நிம்மதியைப் பறித்துக் கொள்ளும். தொலைபேசி எடுக்கக்கூட நேரமில்லாதது போல் திரியும் கணவரை நிறுத்தி வைத்து, பெற்றோருடன் வாரமொருமுறையாவது பேசச் சொல்லலாம். அல்லது எமக்கு நினைவுறுத்துவதற்காக தொழினுட்பத்தில் ஆயிரம் வழிகள் இருக்கின்றன. அவற்றின் கையில் ஒப்படைத்து விட்டு நிம்மதியாக இருக்கலாம். இப்படிச் செய்தால்தான் அன்பைக்காட்டிக்கொள்ளமுடியுமா என்றொரு வினா எழும்பக்கூடும். காட்டிக் கொள்வதிலும் பரிமாறிக்கொள்வதிலுமே அன்பென்ற விருட்சம் பல மடங்காகி, வேர் விட்டுக் கிளை பரப்பி உறவுகளை மேலும் ஆழமாக்குகிறது என்பது எமக்கெல்லாம் தெரிந்திருந்த போதும், அவ்வப்போது மறந்து விடுகிற ஒரு வெளிப்படையான உண்மை.

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பது போல் எதையும் புரிந்து கொள்ளமுடியாத அல்லது புரிந்து கொள்ள மறுக்கின்ற மனைவியைத்தான் கடவுள் எமக்கென்று எழுதி வைத்திருக்கிறார் என்றால் எம் தலைவிதியை நொந்து கொள்ளவதைத்தவிர வேறென்ன செய்ய முடியும். எம்முடனே கூட வளர்ந்த அல்லது எம்மை வளர்த்தவர்களுக்கு எம்மைப் பற்றி நன்றாகவே தெரிந்திருக்கும். எம் ஈகோவைக் கொஞ்சம் தூக்கியெறிந்து விட்டு உண்மையைச் சொல்லி சரணாகதி அடைந்து விடுவதில் எம் தன்மானத்துக்கு ஒன்றும் குறை வந்து விடப்போவதில்லை. உண்மையைப் பகிர்ந்து கொள்ளும் போது பழைய பாசத்தின் வாசத்தை மனம் உணர்ந்து கொள்ள, அன்பின் இறுக்கம் இன்னும் அதிகமாகி உறவுகள் மேலும் நெருக்கமாகும். உறவுகளிடையே விரிசல் தோன்றும் போது இது என் ரத்த உறவென்பதை மறவாமல் மனம் விட்டு உணர்வுகளைப்பகிர்ந்து கொள்ளும்போது, மனவேறுபாடு என்பது என்றுமே முளைவிடச் சாத்தியமில்லை. இரண்டு பக்கமுமே புரிந்து கொள்ளச்சாத்தியமில்லை என்றால், மத்தளத்துக்கு இரண்டு பக்கமுமே அடி என்பதுபோல் எமக்கெனக் கடவுள் எழுதி வைத்தது இவ்வளவுதான் என்பதை ஏற்றுக்கொண்டு மனதையும் வாயையும் சாத்திக் கொண்டு ஒரு ஞானியாக வாழ்வதைத் தவிர வேறு வழியில்லைத்தான்.

பிள்ளைகள், வேலை என்று ஆயிரம் சுமைகளைச் சுமந்து கொண்டு அந்நியமண்ணில் நிற்க இருக்க நேரமின்றி ஓடும் நாங்கள், ஓடிக்களைத்த கடிகாரமாய் எம்சுமைகளை இறக்கி வைத்து விட்டு முதுமையில் சாய்ந்து கொள்ள தோள் ஒன்று தேவை. காலங்கள் கரைந்தோடி காதோரம் நரை தோன்றும் போது சொந்தப்பிள்ளைகளிடம் காணும் குறைகளையும், பேரக்குழந்தைகளின் செல்லக்கதைகளையும் பகிர்ந்து கொள்ள உறவொன்றைத் தேடும்போது எம்மைப் புரிந்து கொண்டு, எம் சுமைகளை இறக்கி வைத்து , எம் மகிழ்ச்சியில் பங்கு கொள்ளும் துணையொன்று உண்டாயின் அது எம்முடன் கூடப்பிறந்த உறவாகவோ அல்லது எம்முடன் கூட வருவதாக உறுதி எடுத்துக் கொண்ட உறவாகவோதான் இருக்க முடியும். இரு உறவுகளினதும் மனங்கோணாமல் நடப்பது என்பது கயிறு மேல் நடக்கும் வித்தைதான் எனினும் மனம் வைத்தால் மார்க்கமுண்டு என்பார்கள். உறவுகளைச் சமநிலையில் பேணும் வித்தையொன்றைக் கண்டு விட்டால் வாழ்வின் வெற்றி என்றும் எம்பக்கமே.

## சத்தத்தின் உணர்ச்சி

-ஆருரன் மதியழகன்-

ஒவ்வொரு அடியும் ஒரு ஓசையை கொடுக்கும்
ஒவ்வொரு ஓசையும் ஒரு உணர்வை கொடுக்கும்
ஓசையும் உணர்வும் வேறு வேறு என்றா லும்
ஒன்றுடன் ஒன்று இணைந்தே இருக்கும்

இடியின் முழக்கம்
அச்சம் தரும்
நீர்வீழ்ச்சியின் ஓசையோ
மன அமைதி தரும்

கண்ணீர் துளி விழும் ஓசை
ஆழ் மனதின் துயரமாகும்
மழலையின் கொஞ்சும் சிரிப்பில்
உள்ளத்தில் ஊற்றெடுக்கும் மகிழ்ச்சியாகும்

புத்தாண்டு வான வேடிக்கையோ
வியப்பூட்டும் ஒலியாகும்
போர் முரசின் முழக்கமோ
வீரமூட்டும் சத்தமாகும்

சிவதாண்டவத்தில் சிவனின் காலடிச்சத்தும்
கோபத்தின் வெளிப்பாடாகும்
அன்னையரின் பொறுமையில் எழும் மௌனத்தின் ஒலி
அன்பின் வெளிப்பாடாகும்!

# THE MANGO TREE

## CATERING SERVICE

# (03) 9791 1111




**WE DO IT ALL...**

**BIRTHDAY PARTIES, ANNIVERSARIES, WEDDINGS & ANY SPECIAL OCCATIONS**

**SPECIAL RATES AVAILABLE FOR: "ARANGETHRAM" FUNCTIONS**

For more details Contact :

**12 CLOW STREET, DANDENONG VIC 3175**

(03) 9791 1111 | 0403 058 808

W: mangotreecaterers.com.au